# பாடசாலை போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டம்

## வழிகாட்டி நூல்









Presidential Task Force on Drug Prevention

போதைப்பொருள் தடுப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணிய

கல்வி அமைச்சு

# பாடசாலை போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டம்

வழிகாட்டி நூல்

கல்வி அமைச்சு

போதைப் பொருள் தடுப்பு ஜனாதிபதி செயலணி

## மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களின் செய்தி

இன்றைய பாடசாலை சிறார்கள் எமது நாட்டின் எதிர்காலத்தை மிளிரச் செய்யும் பிரஜைகளாவர். அவர்களுக்காக நாம் இன்று சொல்வதும் செய்வதும் நாட்டின் எதிர்காலத்திற்கான சிறந்த முதலீடாகும். இன்று அவர்களின் பாதுகாப்பை நாம் உறுதி செய்தால், அவர்கள் எதிர்காலத்தில் நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வார்கள் என்பது நிச்சயம்.

எமது சிறார்கள் எதிர்காலத்தில் சிறந்த ஆளுமை, ஆரோக்கியமுடைய பிரஜைகளாக திகழ வேண்டுமெனின், இன்று அவர்களது வாழ்க்கை மகிழ்ச்சியாகவும் சுதந்திரமாகவும் அமைய வேண்டும். அதற்கான முக்கிய தடையாக இருப்பது மதுசாரம், புகைப்பொருள் உட்பட ஏனைய போதைப்பொருள் பாவனையாகும். இன்று எமது பிள்ளைகள் குறித்த கம்பனிகளதும் போதைப்பொருள் சட்டவிரோத மோசடி வியாபாரிகளதும் நேரடி இலக்காகியுள்ளனர். எனவே எமது பிள்ளைகளை போதைப்பொருள் பாவனையிலிருந்து விடுவிப்பது மிகவும் கடினமாக இருந்தாலும் அதனை மேற்கொள்வது மிகவும் அவசியமாகும்.

பிள்ளைகளின் இரண்டாவது இல்லமாக அமையும் பாடசாலையை அவர்களின் பாதுகாப்பான சூழலாக உறுதிப்படுத்த வேண்டும். கல்வி கற்பது மட்டுமன்றி இதுபோன்ற தீங்கான, போலியான விடயங்களுக்கு ஏமாறாமல் சிந்தித்து சிறந்த தீர்மானங்களை எடுக்கக் கூடிய திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும். அதனை முன்னிட்டு ''போதையற்ற நாடு'' என்ற தொனிப்பொருளில் இடம்பெறும் தேசிய போதைப்பொருள் தடுப்பு செயற்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலை மட்டத்திலான போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டம் மிகவும் பயனுள்ளதாக அமையும்.

பாடசாலையில் நடைமுறைப்படுத்தக் கூடிய, நடைமுறைப்படுத்த வேண்டிய பயன்மிகுந்த போதைப்பொருள் தடுப்புச் செயற்பாடுகள் தொடர்பாக ஆலோசனை வழிகாட்டியொன்றை உருவாக்கியதன் மூலம் குறிப்பிட்ட செயற்பாடுகள் மிகவும் வெற்றிகரமாக அமையும்.

நாட்டின் கொள்கை வகுப்புக்கள் மூலம் அரசாங்கம் என்ற வகையில் நாம் எமது பிள்ளைகளைப் பாதுகாப்பதற்கு இயலுமான அனைத்துத் தீர்மானங்களையும் எடுப்பதற்குப் பின் நிற்கப் போவதில்லை. தராதரம், சமூக அந்தஸ்து ஆகியவற்றைக் கருத்திற் கொள்ளாது போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது எமது கொள்கையாகும்.

சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதால் மாத்திரம் போதைப்பொருள் சீர்கேட்டிலிருந்து எமது பிள்ளைகளைப் பாதுகாக்க முடியாது. மாறாக இதற்கு எதிர்கொள்ளக் கூடிய, இதற்கெதிராக செயற்படக்கூடிய துணிச்சல்மிக்க பிரஜைகள் அவசியமாகும். எமது பிள்ளைகளுக்கு சுதந்திரமாக சுவாசிக்கக் கூடிய, போதையற்ற ஒரு நாட்டின் உருவாக்கத்துக்குத் தேவையான சமூக வலுவூட்டலின் ஆரம்பகட்ட நடவடிக்கைகளுக்கு இவ்வழிகாட்டி மிகவும் உதவுமென நான் நம்புகிறேன்.

பாடசாலைப் பிள்ளைகளைப் மையமாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் இச்செயற்பாடுகள் அனைத்து வழிகளிலும் வெற்றிபெறப் பிரார்த்திக்கின்றேன்..

**மைத்திரிபால சிறிசேன,**
ஜனாதிபதி, இலங்கை சனநாயக சோசலிச குடியரசு.

**எமது பிள்ளைகளின் நாளைய தினத்திற்காக…**

மேன்மைதங்கிய ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்களின் பணிப்புரையின் கீழ் இடம்பெறும் ''போதையிலிருந்து விடுதலைபெற்ற நாடு'' போதைப்பொருள் தடுப்பு தேசிய செயற்திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

இந்நிகழ்ச்சியை சரியான பாதையில் கொண்டு செல்வதற்காக போதைப்பொருள் தடுப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணி கல்வி அமைச்சுடன் இணைந்து, இவ்விடயம் தொடர்பில் நிபுணத்துவம்மிக்க குழுவின் பங்களிப்புடன் போதைப்பொருள் தடுப்பு பாடசாலை வழிகாட்டி நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

மதுசாரம் மற்றும் புகையிலை கம்பனிகளதும், போதைப்பொருள் மோசடி வியாபாரிகளதும் முக்கிய இலக்கு எமது பிள்ளைகளாகும். அவர்களின் தந்திரோபாயங்கள், போலியான எடுத்துக்காட்டுக்கள் மற்றும் ஊடக விளம்பரங்கள் தொடர்பாக பிள்ளைகளுக்கு தெளிவை ஏற்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும். சமூக கண்காணிப்பின் மூலம் போதைப்பொருட்களின் உண்மை நிலைமையை அறிந்து கொள்ள அவர்களைப் பயிற்றுவிக்க வேண்டும். சமவயதுக்காரர்களின் அழுத்தங்களை எதிர்கொள்ளக்கூடிய ஆற்றலை விருத்தி செய்துகொள்ள வேண்டும். அது மட்டுமன்றி குடும்பத்தை, நண்பர்களை, சமூகத்தை, நாட்டை போதைப்பொருள் சீர்கேடுகளிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்காக சமூக செயற்பாட்டாளர்களாக ஒன்றிணைய வேண்டும். அதற்கு சிறந்ததும், இலகுவானதும் வெற்றிகரமானதுமான வழி பாடசாலைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதாகும்.

பிள்ளையை வலுவூட்டுவதற்கும், பாதுகாப்பதற்கும் பிள்ளையைச் சுற்றியுள்ள அனைவரதும் ஒத்துழைப்பு அவசியமாகும். பிள்ளையின் குடும்பம், நண்பர்கள், உறவினர்கள், ஆசிரியர்கள் மட்டுமல்ல பாடசாலையைச் சூழவுள்ள சமூகமும் உள்ளடங்கும். இதில் பழைய மாணவர் சங்கத்திற்கும் பாரிய பொறுப்புள்ளது. பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளின் போதும் (BIG MATCH), பாடசாலையுடன் இணைந்து இதர பல செயற்பாடுகளை செயற்படுத்தும் போதும் பழைய மாணவர் சங்கத்தின் வகிபாங்கு போதைப்பொருள் பாவனையற்றதாக அமைய வேண்டும். எவ்வளவுதான் சிறந்த பாடசாலையாக இருப்பினும் பாடசாலைச் சுற்றுச் சூழல் பிள்ளைக்கு தாக்கம் செலுத்தும். விசேடமாக பாடசாலைக்கு அருகாமையிலுள்ள கடைகள், பாடசாலைக்கு அண்மையில் நடமாடுபவர்கள் மூலமாக போதைப்பொருள் விற்பனை செய்வதற்கு முயற்சிக்கின்றனர். அதனால் பாடசாலைப் பிள்ளைகளை மட்டுமன்றி அதனைச் சூழவுள்ள சமூகத்தையும் இந்தத் தடுப்பு நிகழ்ச்சித் திட்டத்தில் இணைத்துக்கொள்ள வேண்டும்.

பாடசாலையில் ஏற்படுத்தப்படும் இந்த மாற்றங்கள் எதிர்காலத்தில் வாழ்க்கையை இரசிக்கின்ற, ஆரோக்கியமான, தம்மை போலவே பொறுப்புள்ள இளைஞர், யுவதிகளை உருவாக்கும் சமூகம் குறித்து, ''போதையிலிருந்து விடுதலைபெற்ற நாடு'' உருவாக்குவதற்கு நாங்கள் எடுக்கும் முயற்சி வெற்றியடைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**வைத்தியர் சமந்த குமார கித்தலவ ஆராச்சி**
பணிப்பாளர்
போதைத்தடுப்பு தொடர்பான விசேட ஜனாதிபதி செயலணி

## மேற்பார்வை, வழிநடத்தல் மற்றும் ஒருங்கிணைப்பு

திரு. ரோஹண கீர்த்தி திஸாநாயக்க (ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் அபிவிருத்தி மற்றும் விஷேட செயற்றிட்ட பிரிவு, ஜனாதிபதி காரியாலயம்)

திரு. ரோஹண அபேரத்ன (ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் அபிவிருத்தி மற்றும் விஷேட செயற்றிட்ட பிரிவு, ஜனாதிபதி காரியாலயம்)

வைத்தியர் சமந்த குமார கித்தலவ ஆராச்சி (பணிப்பாளர் - போதைத்தடுப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணி)

செல்வி. ரேணுகா பீரிஸ் (கல்வி பணிப்பாளர் - சுகாதாரம் மற்றும் போசாக்குப் பிரிவு, கல்வி அமைச்சு)

திரு. P.W.N.P குணசேகர (உதவிக் கல்விப் பணிப்பாளர் - சுகாதாரம் மற்றும் போசாக்குப் பிரிவு, கல்வி அமைச்சு)

## போதைப்பொருள் தடுப்பு பாடசாலை செயற்றிட்ட வழிகாட்டி நூலை உருவாக்குவதற்காக பங்குகொண்ட வளவாளர்கள் மற்றும் நிறுவனங்கள்

பேராசிரியர் தியனாத் சமரசிங்ஹ (விசேட உளநல நிபுணத்துவ மருத்துவர், சிரேஷ்ட விரிவுரையாளர் கொழும்புப் பல்கலைக்கழகம்)

மருத்துவர் பாலித்த அபேகோன் (தவிசாளர் : புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகாரசபை)

மருத்துவர் மஹேஷ் ராஜசூரிய (விசேட உளநல நிபுணத்துவ மருத்துவர், சிரேஷ்ட விரிவுரையாளர் கொழும்புப் பல்கலைக்கழகம்)

மருத்துவர் ஜெயமால் த சில்வா (விசேட உளநல நிபுணத்துவ மருத்துவர், சிரேஷ்ட விரிவுரையாளர் ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்)

மருத்துவர் சஜீவ ரணவீர (இலங்கை மருத்துவ சங்கம்)

திரு. புபுது சுமணசேகர (நிறைவேற்றுப் பணிப்பாளர்: மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் (ADIC)

திரு. வசந்த லியனகே (ஜனாதிபதி உதவிச் செயலாளர் - போதைத்தடுப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணி)

திரு. மஹேந்திர ஜயசிங்க (பணிப்பாளர் - ஹெல்தி லங்கா நிறுவனம்)

திரு. மாலிந்த ராஜபக்ஷ (அபிவிருத்தி உத்தியோகத்தர் - சுகாதாரம் மற்றும் போசாக்குப் பிரிவு, கல்வி அமைச்சு)

திருமதி. W. ரசிகா மனோஹரி (நிகழ்ச்சித்திட்ட அதிகாரி : மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையம் - ADIC)

திரு. அமர்னாத் தென்ன (சிரேஷ்ட நிகழ்ச்சிதிட்ட அதிகாரி - மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையம் - ADIC)

திரு. R.E. பிரியதர்ஷன (ஆய்வதிகாரி - புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகார சபை)

திரு. J.A. நுவன் பிரதீப் (ஆராய்ச்சி அலுவலர் - புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகார சபை)

திரு. உபுல் காரியவசம் (சிரேஷ்ட நிகழ்ச்சித்திட்ட அதிகாரி – FISD)

திரு. T. உதயரூபன் (நிகழ்ச்சித்திட்ட அதிகாரி – ஹெல்தி லங்கா)

தமிழாக்கம்

மொழிபெயர்ப்பாளர் குழு – ஜனாதிபதி செயலகம் - 2018

மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் - தமிழ்மொழிப் பிரிவு (ADIC)

## அறிமுகம்

பாடசாலை மாணவர்கள் புகையிலை, மதுசாரம், மற்றும் ஏனைய போதைப்பொருளின் பாவனைக்குள்ளாவதை தடுக்கும் நோக்கில் இவ்வழிகாட்டி நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நூல் சம்பிரதாய முறையிலான போதைப்பொருள் தடுப்பு அணுகுமுறைகளை விடவும் வித்தியாசமாக இருப்பதுடன், நீண்ட காலமாக நடைமுறைப்படுத்தப்படுவதும் மிகவும் பயனுள்ளதென நிரூபிக்கப்பட்ட தத்துவங்களுக்கும் முறைமைகளுக்கமைய வடிவமைக்கப்பட்டுள்ளது. விடயம் தொடர்பான நடைமுறைச் சாத்தியமான அனுபவம் வாய்ந்த கல்வியியலாளர்களதும், நீண்டகாலமாக போதைப்பொருள் தடுப்பு முறைமைகளைப் பாடசாலையில் நடைமுறைப்படுத்திய குழுக்களதும் கூட்டு முயற்சியால் இவ்வழிகாட்டி நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, ஏற்கனவே அறிந்துள்ள சுகாதாரத் தீங்குகளாலும், மத ரீதியான அணுகுமுறைகள் அல்லது ஒழுக்க விழுமியங்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சிகளால் மாத்திரமல்லாத முறைமைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும், தற்போது பாடசாலையில் ஏதாவது போதைப்பொருள் பாவனைக்குட்பட்ட அல்லது பாவனை செய்கின்றனர் என சந்தேகிக்கப்படும் குழுவை அவற்றிலிருந்து விடுவிக்கும் அணுகுமுறைக்கு அப்பால் பொதுவாகப் பாடசாலையினுள் புகையிலை, மதுசாரம் உட்பட ஏனைய போதைப்பொருள் பாவனையை சரியான அடிப்படை முறைமைகளால் பலவீனப்படுத்தும் சூழலை உருவாக்கும் அணுகுமுறையும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. அதனை முன்னிட்டு மாணவர்களுக்கு போதைப்பொருள் பாவனைக்குக் கவர்ச்சியை ஏற்படுத்தும் காரணிகள் தொடர்பான தெளிவை அதிகரிப்பதோடு அவற்றை மாற்ற முற்படும் செயற்பாட்டுக் குழுவாகவும் மாணவர்களை உருவாக்க வேண்டும்.

மாணவர்களின் மேடைப் பேச்சுக்கள், உரைகள் போன்றவற்றை விட அவர்களை ஆக்கப்பூர்வமான வினைத்திறன் மிக்க பங்காளர்களாக உருவாக்கும் முறை இங்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வெறும் அறிவை மட்டும் அதிகரிப்பதை விட போதைப்பொருளைப் பாவிப்பவர்கள், பாவிக்காதோர் போன்ற அனைவரிடமும் நடத்தைசார் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு இங்கு குறிப்பிடப்படும் எண்ணக்கரு மற்றும் வழிமுறை மூலம் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. ஒரே தடவையில் செயற்பாடுகளை ஆரம்பிக்காமல் பாடசாலையில் ஏற்படுத்தப்பட வேண்டிய ஏற்படுத்த வேண்டிய மாற்றங்களை மதிப்பிடுவதற்கு இங்கு முன்வைக்கப்பட்டுள்ள குறிகாட்டிகளை நன்கு வாசித்துத் தெளிவைப் பெற்றுக்கொள்வது உமது முயற்சிக்கு மெலும் பலன்கள் கிட்டும்.

மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை விடவும் முக்கியமாக அமைவது பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு பாடசாலையை மதிப்பிடவதேயாகும். இந்த முயற்சியை மேலும் விருத்தி செய்வதற்காக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைச் செயற்படுத்தியதன் பின்னர் உங்களது கருத்துக்களைக் கல்வி அமைச்சுக்குத் தெரிவிக்குமாறு மிகவும் கௌரவமாக வேண்டுகின்றோம்.

அவ்வாறே இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் கோட்பாடுகளை புரிந்துகொண்டதன் பின்னர், நீங்களும் ஆக்கபூர்வமான புதிய முறையொன்றினைப் பரீட்சித்து சிறந்த பல செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென்பதே இதில் பங்குகொண்ட அனைவரதும் எதிர்ப்பார்ப்பாகும்.

## உள்ளடக்கம்


| *தலைப்பு* | *பக்கம்* |
|---|---|
| 1.0 போதைப்பொருள் தடுப்பு பாடசாலை செயற்றிட்ட அறிமுகம் | 1 |
| 2.0 போதைப்பொருள் தடுப்பு குழு அமைத்தல் | 3 |
| 3.0 பயன்தகு போதைப்பொருள் தடுப்பு வேலைத்திட்டத்தின் பண்புகள் | 5 |
| 4.0 போதைப்பொருள் தடுப்பு பாடசாலை நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் | 6 |
| 5.0 போதைப்பொருள் தடுப்பு தொடர்பாக பாடசாலையில் நடைமுறைப்படுத்தக்கூடிய செயற்பாடுகள் | 10 |
| 6.0 வெற்றிகரமான போதைப்பொருள் தடுப்புச் செயற்றிட்டத்தை அமுல்படுத்தும் பாடசாலையில் காணப்பட வேண்டிய பண்புகள் | 14 |
| 7.0 போதைப்பொருள் தடுப்பு பற்றி மேற்கொள்ளக் கூடாத விடயங்கள் | 16 |
| 8.0 போதைப்பொருள் தடுப்புப் பற்றிய பாடசாலை நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகள் | 17 |

# 1.0 போதைப்பொருள் தடுப்பு பாடசாலை செயற்றிட்ட அறிமுகம்

## போதைப்பொருள் தடுப்பு செயற்றிட்டத்தின் நோக்கங்கள்

- பாடசாலையை போதைப்பொருள் பாவனையைப் பலவீனப்படுத்தும் சூழலாக மாற்றுதல்.
- போதைப்பொருள், புகையிலை மற்றும் மதுசாரப் பாவனைக்கு ஏமாறாமல் இருப்பதற்கு பிள்ளைகளுக்கு திறனை விருத்தியை ஏற்படுத்தக்கூடிய பௌதீகச்சூழலை பாடசாலையில் உருவாக்குதல்.
- பிள்ளைகளிடையே தெளிவாக விளங்கி முடிவுகளை எடுக்கும் திறனை வளர்த்தல், மற்றும் தமக்கும், சமூகத்திற்கும் பாதிப்பான விடயங்களை நிராகரிக்கும் திறனை வளர்த்தல்
- போதைப்பொருள் தடுப்பு செயற்றிட்டங்கள் தொடர்பாகப் பாடசாலை சமூகத்தை விழிப்புணர்வூட்டி அவர்களின் ஆர்வம்மிக்க பங்களிப்பைப் பெறல்

## போதைப்பொருள் தடுப்பு என்றால் என்ன?

போதைப்பொருள் தடுப்பு என்பது, விஞ்ஞான ரீதியாகவும், பயன்மிகு விதத்திலும் போதைப்பொருள் பாவனைக்கான விருப்பத்தை கட்டியெழுப்புவதை குறைவடைவதும், எதிர்காலத்தில் பாவனையைத் தூண்டும் தீய சக்திகளின் தாக்கத்தைக் குறைப்பதுமாகும். தற்போது ஏதாவது போதைப்பொருட்களைப் பாவிப்பவர்கள் இருந்தால் அவர்களின் பாவனையைப் பலவீனப்படுத்துவதற்குத் தேவையான தெளிவை அதிகரிப்பதும், போதைப்பொருள் பாவனைக்குத் தூண்டப்படும் சந்தர்ப்பங்களில் அவை தூண்டப்படுவதற்கான பின்புலக் காரணிகளைக் கண்டறிந்து அவற்றைப் பலவீனப்படுத்தும் திறன்மிக்க பாடசாலைச் சூழலை உருவாக்குவதாகும்.

## போதைப்பொருள் தடுப்பு இலக்குக்குழு

- பாடசாலையின் அனைத்து மாணவ, மாணவிகள்
- பாடசாலையின் துடிப்பான மாணவர் குழுக்களும் போதைப்பொருள் பாவனைக்குட்படக்கூடிய மாணவர் குழுக்களும் (பாடசாலையில் முறையற்ற விதத்தில் இருக்கும் குழுக்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்த வேண்டியதுடன், அக்குழுக்களின் தலைவர்களை அடையாளம் கண்டு போதைப்பொருள் தடுப்பு தொடர்பில் தெளிவூட்டி அவர்களை செயற்பாடுகளில் இணைத்துக்கொள்வது மிகவும் பயன்மிக்கதாக அமையும்).
- ஆசிரியர் குழாத்தின் உறுப்பினர்கள்
- பெற்றோர்கள்
- பழைய மாணவ, மாணவிகள்
- பாடசாலையைச் சூழவுள்ள வர்த்தக சமூகத்தினரும் குடியிருப்பாளர்களும்

- ❖ பாடசாலைக்குப் பல்வேறு சேவைகளை வழங்குபவர்கள் (பாடசாலை போக்குவரத்துச்சேவை சாரதிகள் போன்றோர்)

- ❖ பாடசாலையில் அல்லது பாடசாலைக்கு வெளியே விளையாட்டுப் போட்டிகளுக்காகவும் முறைசாரா பாடவிதான செயற்பாடுகளுக்காகவும் இணைத்துக்கொள்ளும் பயிற்றுவிப்பாளர்கள்/நபர்கள்.

## பாடசாலைச் சூழலில் எதிர்ப்பார்க்கப்படும் மாற்றங்கள்

1.மதுசாரம், சிகரட் உட்பட்ட போதைப்பொருட்களின் பாவனை முட்டாள்தனமான, அசௌகரியமானதும் ஏமாற்றம் தருவதும் எக்காரணத்தினால், என்பது தொடர்பில் மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் சிறந்த தெளிவுபெற்றிருத்தல்

2. மதுசாரம் ,சிகரட் மற்றும் போதைப்பொருட்களை ஊக்குவிக்கும் வகையில் வெகுசன ஊடகங்களின் பங்களிப்பு தொடர்பான தெளிவைக் கொண்டுள்ள மாணவர்களும் ஆசிரியர்களும் பாடசாலையில் இருத்தல்

3. மதுசாரம், சிகரட் உட்பட்ட போதைப்பொருட்களின் வியாபார உத்திகள் தொடர்பாக பாடசாலைச் சூழலில் கலந்துரையாடும் மாணவர்கள், ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகரித்தல்.

4. பாடசாலைச் சூழலில் போதைப்பொருள் தடுப்புக்கான பௌதீக சூழல் உருவாக்கப்பட்டிருத்தல்

5. பாடசாலையில் எந்தவொரு மாணவனும் போதைப்பொருள், மதுசாரம் மற்றும் சிகரட் பாவனைக்குட்படுவதைத் தடுப்பதற்காக, பாடசாலையில் செயற்படும் குழுக்களின் எண்ணிக்கை அதிகரித்தல்

6.பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிக் காலங்களில் (Big match) போதைப் பொருட்களை விளம்பரமாக்கும் நபர்களுக்கு எதிராகச் செயற்படுகின்ற தரப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்தல்

7.பாடசாலையின் நிகழ்வுகளில் எந்த வகையிலும் மதுசாரம் மற்றும் புகைத்தலை விளம்பரப்படுத்தும் வகையிலான செயற்பாடுகள் இடம்பெறுவதற்கு அனுமதிக்காதிருத்தல்.

8. பாடசாலையுடன் தொடர்புடைய பெற்றோர்கள், நலன்விரும்பிகள் மற்றும் ஏனைய தரப்பினர் மத்தியில் மாற்றங்களைக் காணக்கூடியதாக இருத்தல்

9.போதைப்பொருட்களை விளம்பரமாக்காத வகையிலான ஆக்கபூர்வ செயற்பாடுகள் பாடசாலையில் மேற்கொள்ளப்படல்

## 2.0 போதைப்பொருள் தடுப்புக் குழு அமைத்தல்

அனைத்துப் பாடசாலைகளிலும் போதைப்பொருள் தடுப்புக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டியதுடன், பாடசாலையின் அனைத்து மாணவர்களையும் இலக்காகக் கொண்ட போதைப்பொருள் தடுப்பு தொடர்பான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

### போதைப்பொருள் தடுப்புக் குழுவின் கட்டமைப்பு

கல்வி அமைச்சின் செயலாளரின் ED/01/02/09/03/02 இலக்கமுடைய 2015.05.21 ஆம் திகதிய அறிவுறுத்தல் கடிதத்திற்கமைய போதைப்பொருள் தடுப்புக் குழுவை நியமிப்பதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது. பாடசாலையில் போதைப் பொருள் தடுப்புக் குழு அமைக்கப்பட்டு செயற்றிறன்மிக்க வகையில் செயற்படுத்தப்படவில்லையெனில், மேற்படி அறிவுறுத்தல்கள் புறக்கணிக்கப்பட்டதாகக் கருதப்படுவதுடன், இது தொடர்பில் குறித்த பாடசாலையின் அதிபர் பொறுப்புக் கூறவேண்டும். அதற்கமைய கீழ்வருமாறு அனைத்துப் பாடசாலையிலும் போதைப்பொருள் தடுப்புக் குழு உருவாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

### பிரதம ஆலோசகர் - அதிபர்

- ஆலோசகர்கள் : பிரதி அதிபர் ஒருவரும், சுகாதாரமும் உடற்கல்விக்குமான பொறுப்பாசிரியர் அல்லது உளவள ஆலோசகர் மற்றும் தொழில் வழிகாட்டி விடயப் பொறுப்பாசிரியர் (இப்பாட ஆசிரியர்கள் இல்லாவிடின் வேறெந்த ஆசிரியரையேனும் இணைத்துக்கொள்ள முடியும்)

- தலைவர் :
- உபதலைவர்:
- செயலாளர்:
- உபசெயலாளர்:
- பொருளாளர்:
- மாணவர் குழு அங்கத்தவர்கள்(15)
- பெற்றோர் அங்கத்தவர்கள் (2)

மாணவர்களுக்குத் தலைமை வகிக்கக் கூடிய விளையாட்டு மற்றும் வெளிக்களச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற துடிப்பான மாணவர்களை இக்குழுவில் இணைத்துக்கொள்வது சாலப் பொருத்தமானதாகும்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும், இச் செயற்றிட்டத்திற்கு செயற்றிறன் மிக்கதாக பங்களிக்கக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.

- குறித்த குழுவை நடாத்திச் செல்லும் போது மாணவர்களை ஈர்க்கும் வகையில் மாணவர்களால் தீர்மானிக்கப்படும் பொருத்தமான பெயரைச் சூட்டுவதற்கு அதிபர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். (உதாரணம் - Youth zone )
- குறித்த தடுப்புக் குழுவுக்கு சுற்றுநிருபத்தில் குறிப்பிட்ட அலுவலர்களுக்கு மேலதிகமாக செயற்றிறனுடன் ஆர்வமாக போதைப்பொருள் தடுப்பு செயற்பாடுகளில் பங்குகொள்ள விரும்பும் ஆசிரியர் ஒருவரை மாணவர் குழுக்களுக்குப் பொறுப்பான ஆசிரியராக நியமித்தல் மிகவும் பொருத்தமாக அமையும்.

## அதிபரின் பணிகள்

அதிபர் இக்குழுவின் பிரதம ஆலோசகர் ஆவதுடன், போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதம பொறுப்பாளராவார். பாடசாலையின் வருடாந்த போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக திட்டத் தயாரிப்பு, அவற்றைப் பாடசாலை வருடாந்த திட்டத்திலும், ஐந்தாண்டு திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுதல் தொடர்பாக கண்காணிக்கும் பொறுப்பு அதிபரைச் சாரும். மேலும் “பாடசாலைச் சூழலில் சிகரட், மதுசாரம் மற்றும் ஏனைய போதைப்பொருட்களின் பாவனைத் தவிர்ப்பு வலயமாக மாற்றுதல் பற்றிய 2012/28” சுற்றுநிருபத்திற்கமைய நடைமுறைப்படுத்துதல் அதிபரின் பொறுப்பாகும்.

## பிரதி அதிபர் மற்றும் ஆசிரியர்களின் பொறுப்பு

போதைப்பொருள் தடுப்புப் பற்றிய சரியான, விஞ்ஞானபூர்வமான அறிவைப் பெற்றுக்கொண்டு அவற்றை மாணவர்களுக்கு வழங்கி, அவர்களை சரியாக வழிநடாத்தி வருடாந்த போதைப்பொருள் தடுப்பு செயற்றிட்டத்தைத் தயாரித்தல், குறித்த குழுக்களை இலக்காகக் கொண்டு அவ்வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், மற்றும் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான முன்னேற்றத்தை அதிபருக்கு அறிக்கையிடல்.

## மாணவர் குழு நிர்வாகிகள் மற்றும் மாணவர் குழுவின் பொறுப்பு

போதைப்பொருள் தடுப்பு தொடர்பான சரியான, விஞ்ஞான ரீதியான அறிவைப் பெற்று, பாடசாலையில் நடைமுறைப்படுத்தக்கூடிய வேலைத்திட்டத்தை ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் திட்டமிடலும் அமுல்படுத்தலும்.

## பெற்றோர் அங்கத்தவர்களின் பொறுப்பு

போதைப்பொருள் தடுப்பு செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொடுத்தலும் போதைப்பொருள் தடுப்புப் பற்றிய அறிவை சமூகத்திற்குக் கொண்டு செல்லும் பணியை மேற்கொள்ளலும் பெற்றோரின் பொறுப்பாகும். இப்பணிக்காக பங்குகொள்ளும் பெற்றோர்கள், குறித்த செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படும் போது முறையாக தங்களது அறிவை வளர்த்துக் கொள்ளல் எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்குழுவானது வருடாந்தம் புதிதாக நியமிக்கப்படுவதன் மூலம் பாடசாலையில் கூடுதலான தரப்பினருக்கு இவ்வேலைத்திட்டத்துடன் இணைந்துகொள்ளக் கூடிய வாய்ப்பு கிடைப்பதும், வருடாந்தம் புத்துணர்ச்சியுடன் போதைப்பொருள் தடுப்பு செயற்பாடுகளை மேற்கொள்ளவும் முடியும்.

## 3.0 பயன்மிகு போதைப்பொருள் தடுப்புச் வேலைத்திட்டத்தின் பண்புகள்

- திட்டவட்டமான, எதிர்பார்க்கப்படும் மாற்றத்தை இலக்காகக் கொண்டிருத்தல் வேண்டும்
- இலக்குக் குழுவுக்குக் கவர்ச்சியாகப் பேசும் ஆற்றல் இருத்தல் வேண்டும்
- இக்குழு செவிமடுப்பவர்களாக மாத்திரமன்றி செயற்பாட்டாளர்களாக தடுப்பு செயற்பாடுகளில் இணைத்துக்கொள்ளல் வேண்டும்
- குறுகிய காலத்தில் நடத்தை ரீதியான மாற்றங்களை நடைமுறையில் காணக்கூடிய வகையில் செயற்பாடுகளை உள்வாங்கக்கூடியதோடு, அந்நடத்தைகள் நீடித்து நிலைத்திருப்பதற்கான மதிப்பீட்டுச் செயன்முறையை நடைமுறைப்படுத்தல் வேண்டும்
- அறிவை மட்டும் வழங்காமல் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு தொடர்பில் தொடர் கண்காணிப்பை மேற்கொள்ளல் வேண்டும்.
- போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளுக்காக மாணவர்களை ஆர்வத்துடன் இணைத்துக்கொள்ளல் வேண்டும்.
- போதைப்பொருள் தடுப்புச் செயற்பாடுகள் இரசனைமிக்க, எளிதான, உற்சாகமான செயற்பாடுகளை உள்வாங்கியிருத்தல் வேண்டும்.
- மாணவர் பங்கேற்பு மற்றும் அவர்களின் ஆற்றலினூடாக மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
- எண்ணிக்கைத் தரவுகள் அல்லது செயற்பாடுகளால் மாத்திரமல்லாது நடத்தையிலான மாற்றத்தினூடாகவும் பெறுபேறுகளை அளவிடக் கூடியதாக இருத்தல் வேண்டும். (தரம் மற்றும் அளவு)
- அந்தந்த வயதுக் குழுவினருக்கும், மாணவர் குழுவுக்கும் பொருந்தும் வகையிலான வேலைத்திட்டங்கள் பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

## 4.0 போதைப்பொருள் தடுப்பு பாடசாலை நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள்

- **மதுசாரம், சிகரட் உட்பட்ட போதைப்பொருட்களின் பாவனை தொடர்பில் மாணவர்களுக்குக் கவர்ச்சியை உருவாக்கும் விதம் தொடர்பில் அறிந்து கொள்ளல்**

    - மகிழ்ச்சிகரமான சந்தர்ப்பங்களின் போது மதுசாரம் மற்றும் சிகரட் உட்பட்ட போதைப்பொருட்கள் குடிப்பதைக் காணுதல் (கொண்டாட்டங்கள், விழாக்கள், வைபவங்கள் போன்றன)

    - மதுசாரம், சிகரட் உட்பட்ட போதைப்பொருட்களின் பாவனையால் பலமும் சக்தியும் அதிகரிக்கின்றன எனப் பிரச்சாரம் செய்தல்

    - குழுவாக ஒன்றுசேரும் போது மேற்கொள்ளும் விடயமாக அறிந்திருத்தல்

    - மதுசாரம் அருந்துபவர்களுக்கு உயர் சமூகத்தில் அல்லது தமது குழுவில் மதிப்புக் கிடைக்கும் என இனங்கண்டிருத்தல்

    - வளர்ந்தோரால் போதைப் பொருள், மதுசாரம் அல்லது சிகரட் தொடர்பில் மாணவர்கள் மத்தியில் ஏதேனும் தூண்டுதலையோ விருப்பத்தையோ ஏற்படுத்தும் வகையிலான கருத்துக்களைத் தெரிவித்தல் மற்றும் மறைமுகமான தொடர்பாடலை மேற்கொள்ளல்

    - வீட்டிலோ அல்லது சுற்றுப்புற சூழலில் மதுசாரம் மற்றும் புகைத்தலில் ஈடுபடுகின்ற சந்தரப்பங்களைப் பிள்ளைகள் காணக்கூடியதாக இருத்தல்

    - ஊடகங்கள் வாயிலாக இடம்பெறும் மதுசாரம், போதைப்பொருள் மற்றும் சிகரட் என்பவற்றை ஊக்குவிக்கும் விதத்திலான நிகழ்ச்சிகள்

**மதுசாரம், போதைப்பொருள் மற்றும் சிகரட் போன்றவற்றின் இரசாயனத் தாக்கத்தினை அறிந்துகொள்ளல்**

- ❖ மதுசாரம், புகைப்பொருள் மற்றும் போதைப்பொருள் உடற்தொழிற்பாட்டைக் குறைத்து சோர்வை ஏற்படுத்தும். (நரம்புத் தொகுதியை பலவீனப்படுத்தும், பார்த்தல், கேட்டல், உணர்திறன் பலவீனமடைதல், உடலியல் செயற்பாடுகள் குன்றுதல்)
- ❖ அருவருப்பான, வெறுக்கத்தக்க, கசப்பானவை
- ❖ சிகரட்டில் நான்காயிரம் நச்சுப் பதார்த்தங்கள் உள்ளன (தார், நிக்கொட்டின், அமோனியா, நெப்தலின் போன்றவை)
- ❖ மதுசாரம் போதைப்பொருட்களின் பாவனையால் ஏற்படும் இரசாயன ரீதியான தாக்கங்களுக்கும் பாவனையின் பின்னர் காட்டும் நடத்தைகளுக்கும் இடையில் தொடர்புகள் இல்லையென்பதையும், அதுபோலவே மதுசாரம் போதைப்பொருள் பாவனையின் பின்னர் ஏற்படும் அசௌகரியங்களை மூடிமறைப்பதற்காக நடிக்கின்றார்கள் என்பதையும் விளங்கிக்கொள்ளல்

**மதுசாரம், சிகரட் உட்பட்ட போதைப்பொருட்களின் பாவனையின் பாதிப்புக்களும் தீமைகளும்**

**1. மகிழ்ச்சி மட்டுப்படல்**

(1) சந்தோசம் மட்டுப்படல்

சந்தோசமான வேளைகளில் அருவருப்பான கசப்பானவற்றைப் பாவனை செய்ய நேரிடுவதால் அச்சந்தர்ப்பத்தில் இயல்பாகவேயுள்ள சந்தோசத்தை அனுபவிக்க முடியாது போதல்

சந்தோசமான வேளைகளாயினும் மதுசாரம், போதைப்பொருள் இல்லாது சந்தோசத்தை அனுபவிக்க இயலாமல் போதல், வாழ்க்கையை மட்டுப்படுத்தி இரசனைகளைக் குறைக்கும்.

**2. அநீதி**

- தீங்கு விளைவிக்கும் பொருட்களைப் பாவனை செய்வதால் தான் தனது உடலுக்கு ஏற்படுத்தும் அநீதிகள்
- குடும்பத்தில் அனைவருடைய தேவைகளையும் பூர்த்தி செய்யவுள்ள பணத்தை ஒருவர் மாத்திரம் வீண்விரயம் செய்தல் (உணவுப் பொருட்கள், புத்தகங்கள் வாங்கும் பணத்தை மதுசாரம், சிகரட் உட்பட்ட போதைப்பொருட்களுக்காக செலவிடல்)

(3) சுகாதாரப் பாதிப்புக்கள்

- உடலில் துர்நாற்றம் வீசுதல்
- பற்கள் மஞ்சள் நிறமாதல்
- உதடு கறுத்தல்
- செந்தளிப்புக் குறைதல்
- கண்கள் சுருங்குதல்
- வயது முதிர்ந்த தோற்றம் ஏற்படல்
- உடல் படிப்படியாக பலவீனமடைந்து உடல் வலிமை குன்றிய தோற்றம்
- பாலியல் பலவீனம் உண்டாதல்
- புற்று நோய், ஏனைய நோய்களுக்கு ஆளாதல்

(4) பொருளாதாரப் பாதிப்புக்கள்

ஒருவர் நாளாந்தம் மதுசாரம், சிகரட் உட்பட்ட போதைப்பொருட்களின் பாவனைக்காக குறித்த காலப்பகுதியில் செலவிடும் பணத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால் அவர் வீண்விரயம் செய்யும் பணத்தொகையை அறிந்து கொள்ள முடியும். குறித்த தொகையை வேறு முதலீடுகளுக்கோ அல்லது வேறு தேவைகளுக்கோ பயன்படுத்துதல் பயனுள்ளதாக அமையும்.

## சாராயம், பியர், சிகரட் கம்பனிகளின் மறைமுகப் பிரச்சாரங்கள், கையாளும் உத்திகள் பற்றிய தகவல்கள்

- ❖ பிரபலங்கள் மற்றும் நடிகர் நடிகைகளுக்குப் பணம் கொடுத்து மதுசாரம், சிகரட் உட்பட்ட போதைப்பொருட்களின் பாவனையை விளம்பரப்படுத்தும் காட்சிகள் ஊடகங்கள் வாயிலாகப் பரப்பப்படுவதை எடுத்துக் காட்டல்

- ❖ நாடகங்கள், பாடல்கள், காணொளிகள், விளம்பரங்கள் மற்றும் திரைப்படங்களுக்குப் பணம் வழங்கி மதுசாரம் மற்றும் சிகரட் பாவனைக் காட்சிகள் வாயிலாகப் பிரச்சாரம் செய்வதை எடுத்துக்காட்டுதல்.

- ❖ பல்வேறு வைபவங்களுக்கு அனுசரணைகளை வழங்குதல், விழாக்களை ஒழுங்குபடுத்தல் போன்றன இக்கம்பனிகளால் நடாத்தப்படுவதை சான்றுகளுடன் எடுத்துக்காட்டல்

- ❖ மதுசாரம், சிகரட் உட்பட்ட போதைப்பொருட்களைப் பாவனை செய்பவர்களைக் கவர்ச்சியாகவும் வீரத்தனமாகவும் சித்தரித்துக் காட்டும் நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுகின்றமையை எடுத்துக்காட்டல்.
- ❖ இணையத்தளங்கள், முகநூல் போன்ற சமூக வலைத்தளங்கள் மூலமாக மேற்கொள்ளப்படும் பிரச்சாரங்கள் மேற்கொள்ளும் முறைகளை சான்றுகளுடன் எடுத்துக்காட்டுதல்

- ❖ பாடசாலைச் சூழலிலோ அல்லது மாணவர்கள் அதிகமாக நடமாடும் இடங்களிலோ, பணம் அல்லது வேறு சலுகைகளை வழங்கி மதுசாரம், சிகரட் பாவனை செய்பவர்களை காணபித்தல் இக்கம்பனிகள் மேற்கொள்ளும் மேலுமொரு உத்தியென்பதை எடுத்துக்காட்டல்

- ❖ பிள்ளைகளைக் குறிவைக்கும் பல்வேறுபட்ட கார்டூன் கதாபாத்திரங்கள், விளம்பரங்கள் போன்றவற்றை எடுத்துக்காட்டி தெளிவுபடுத்துதல்

## பிள்ளைகளைக் குறிவைத்து இடம்பெறும் விளம்பரங்கள் மற்றும் வியாபாரங்கள் பற்றி எடுத்துக்காட்டல்

- ❖ குறித்த கம்பனிகள் நீண்டகால இலக்குகளின்படி பிள்ளைகளின் எண்ணத்தை மதுசாரம், சிகரட் உட்பட்ட போதைப்பொருட்களின் பாவனைக்குட்படுத்துவதற்கு உத்திகளைக் கையாளல் (உதாரணம் : - கார்டூன் மூலம் பிள்ளைகளைக் குறிவைத்தல்)

- ❖ இலகுவாகப் பிள்ளைகளை ஏமாற்ற முடியுமெனக் கருதி வியாபாரிகள் அவர்களைக் குறிவைத்து விற்பனை செய்தல்

- ❖ பாடசாலைகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகளில் (Big match) மற்றும் வேறு நிகழ்ச்சிகள் (இசைக் நிகழ்ச்சிகள்) போன்றவற்றில் சாராயம், பியர், சிகரட் வியாபாரத்தை வெளியிலுள்ள தரப்பினருடன் (பல்வேறு பழைய மாணவர் சங்கம் போன்ற) மேற்கொண்டு மாணவர்களை ஏமாற்றுவதற்கு முயல்கின்றமையை எடுத்துக்காட்டல்

- ❖ அடிக்கடி பொலிசாரால் கைது செய்யும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் பலர் அவற்றை பிள்ளைகளுக்கு விற்பனை செய்வதற்காக எடுத்துச் சென்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையால், அவற்றுக்கு ஏமாறாமல் பிள்ளைகள் தாம் பாதுகாப்புப் பெறும் விதம் தொடர்பாக தெளிவூட்டல்.

## 5.0 போதைப்பொருள் தடுப்பு தொடர்பாக பாடசாலையில் நடைமுறைப்படுத்தக் கூடிய செயற்பாடுகள்

- எதிர்காலத்தில் போதைப்பொருள் தடுப்பு தொடர்பாக திட்டவரைபைத் தயாரித்தலும் பாடசாலையில் வருடாந்த செயற்பாட்டு திட்டத்தையும் ஐந்து வருடத் திட்டத்தையும் தயாரித்து நடைமுறைப்படுத்தல்

- விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

- சித்திரம், சுவரொட்டி, கண்காட்சி, கவிதை, கட்டுரை போன்ற ஆக்கங்கள் (போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளடக்கத்திற்கேற்ப குறித்த ஆக்கங்கள் சமர்ப்பிக்க வேண்டும். இதன்போது போதைப்பொருட்களின் பாவனையை பலவீனப்படுத்தும் கருத்துக்கள் மாத்திரமே கலந்துரையாடப்பட வேண்டும்)

- பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைச் சமூகத்தைச் சார்ந்த பெற்றோர்களுக்கும் போதைப்பொருள் தடுப்புப் பற்றி சரியான தெளிவூட்டலை வழங்கல்

- போதைப்பொருள் தடுப்பு தொடர்பில் அனைவரதும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆக்கபூர்வமான தடுப்பு செயற்றிட்டங்களை மேற்கொள்ளல்.
    - உதாரணம்: விசேட தினக் கொண்டாட்டம், துண்டுப் பிரசுரங்களைப் பகிர்ந்தளித்தல், சமூக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகளை நடாத்துதல், வியாபார நிலைய உரிமையாளர்களைத் தெளிவுபடுத்தல்

- போதைப்பொருள் பாவனைக்கு ஆளாகக் கூடிய ஆபத்து நேர்வுகளைக் கொண்ட மாணவர்களை இனங்கண்டு, அவர்களுக்கான விசேட விழிப்புணர்வு செயலமர்வுகளிலும், தடுப்புச் செயற்பாடுகளுக்காகவும் அவர்களை ஆர்வத்துடன் பங்குகொள்ளச் செய்தல்

- பாடசாலை மாணவர்கள் போதைப்பொருள் பாவனைக்குள்ளாகும் வாய்ப்புக்களைக் குறைப்பதற்காக பாடசாலை வளாகத்திற்குள் இவற்றை எடுத்துவருவதற்கு முயலும் நபர்கள் பற்றி கவனமாக இருப்பதுடன், குறித்த நபர்கள் தொடர்பில் அதிபர் மற்றும் ஏனைய ஆசிரியர்களை தெளிவுபடுத்தி உரிய முறையில் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு தகுந்த நடவடிக்கைகளை எடுத்தல்.

- போதைப்பொருள் பாவனையை ஊக்குவிக்கும் வகையிலான எந்தவொரு செயற்பாட்டுக்கும் பாடசாலைச் சூழலில் இடமளிக்காதிருக்க நடவடிக்கை எடுத்தல் (துண்டுப்பிரசுரங்கள் பகிர்ந்தளித்தல், பாடசாலை நிகழ்வுகளுக்கு சாராயம், பியர், சிகரட் கம்பனிகளிடமிருந்தோ அல்லது போதைப்பொருள் வர்த்தகர்களிடமிருந்து அனுசரணைகளைப் பெறுவதைத் தடுத்தல், பாடசாலை நிகழ்வுகளில் அவர்களுக்கு வாய்ப்புக்கள் வழங்குவதைத் தடுத்தல், சட்டபூர்வமான போதைப்பொருள் வர்த்தகராயினும் அவற்றுக்கு இடமளித்தல் ஆகாது)

- பயன்மிகு தடுப்புச் செயற்பாடுகளைப் பாடசாலையில் நடைமுறைப்படுத்தல்

- போதைப்பொருள் தடுப்புப் பற்றிய கருத்துக்களை வெளிக்கொணரும் வகையில் வீதி நாடகம் மற்றும் நாடகம் போன்றவற்றைப் பாடசாலையிலும் பாடசாலைக்கு வெளியிலும்

நடித்தல். (போதைப்பொருள் பாவனை செய்யும் கதாபாத்திரத்தைக் கவர்ச்சியற்ற விதத்திலும், போதைப்பொருள் பாவனை செய்யாத கதாபாத்திரத்தை பிரபல பாத்திரமாகவும், ஏனையோர் பின்பற்றக்கூடிய விதத்திலும் நாடகத் திரைவசனத்தை தயாரித்தலும், அதற்கான கதாபாத்திரங்களைத் தெரிவு செய்யும் போதும் கவனமெடுக்க வேண்டும்)

- போதைப்பொருள் தடுப்பு பற்றிய நிபுணத்துவம் கொண்ட நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட பொருத்தமான திரைப்படங்கள் காணொளிகள் போன்றவற்றைக் காண்பித்தல்.

- போதைப்பொருள் தடுப்பு பற்றிய அறிவைப் பெருக்கும் வகையிலான கண்காட்சிகளை நடாத்துதல்

- பாடசாலைகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகளின் போது (Big match) போதைப்பொருள் பாவனையைப் பரப்பும் குழுக்கள் மற்றும் நபர்கள் பற்றி அவதானமாக இருத்தல், அடையாளங்கண்டு அவற்றைத் தடுப்பதற்கான விளக்கத்தையும், தடுப்புச் செயற்பாடுகளுக்காக மாணவர்களின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளல். அத்துடன் குறித்த பிரச்சாரக் குழுக்கள் வலுவிழக்கும் வகையில் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

- போதைப்பொருள் தடுப்புச் செயற்பாடுகளுக்காக எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடையும் நோக்கிலான சுவரொட்டிகள், அறிவிப்பு பலகைச் செய்திகள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள் போன்றவற்றைத் தயாரித்தல் (இங்கு போதைப்பொருட்களின் பாவனையை ஊக்குவிக்கும் வகையிலோ அல்லது வீரச் செயலாகக் காட்டும் விதத்திலான படைப்புக்களோ இடம்பெறலாகாது)

- பாடசாலையில் போதைப்பொருள் தடுப்புத் தொடர்பில் சிறிய குழுக்களை அமைத்து அவற்றின் மூலம் ஏனைய மாணவர்களைத் தெளிவூட்டும் சிறு குழுச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

- பாடசாலையுடன் தொடர்புடைய பல்வேறு தரப்பினருக்கு போதைப்பொருள் தடுப்புப் பற்றிய அறிவைப் பெற்றுக்கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளல்

- பாடசாலையின் நூல் நிலையத்தின் ஒருபகுதியில் போதைப்பொருள் தடுப்புப் பற்றிய பொருத்தமான புத்தகங்கள், செய்தித்தாள், அறிக்கைகள், துண்டுப்பிரசுரங்கள், காணொளிகள் போன்றவற்றை பேணுதல்

- போதைப்பொருள் தடுப்பு பாடசாலை நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக பயிற்சி மற்றும் விசேட நிபுணத்துவத்தைக் கொண்ட வளவாளர்களால் விரிவுரை நடாத்துதல்

- பாடசாலைக் காலைக் கூட்டத்தில் போதைப்பொருள் தடுப்பு தொடர்பாக மாணவர்களைக் கொண்டு பேச்சு நடாத்துதல் (போதைப்பொருள் பாவனை ஊக்குவிப்புப் பற்றி வெகுசன ஊடகங்களின் தாக்கம், மதுசாரம் மற்றும் சிகரட் பாவனையை ஊக்கவிப்பதற்கு கம்பனிகள் மேற்கொள்கின்ற முயற்சிகள், பிள்ளைகளை தவறாக வழியில் இட்டுச்செல்லும் வகையிலான நடிப்புக்கள் பற்றி சமூகத்திலுள்ள சில நபர்களால் மதுசாரப் பாவனைக்கு ஏனையவர்களை தூண்டுவதற்கு எடுக்கும் முயற்சிகள் தொடர்பாக வெளிப்படுத்தல்)

- ❖ பாடசாலை ஊடகப் பிரிவால் பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னர் போதைப்பொருள் தடுப்பு தொடர்பான செய்திகளை அறிவித்தல். (விஞ்ஞான ரீதியான கருத்துக்கள் உள்ளடங்க வேண்டும்)

- ❖ போதைப்பொருள் தடுப்பு பற்றி மாணவர் மைய முகாம் நடாத்துதல்

- ❖ அன்றாடம் ஊடகங்கள் வாயிலாக போதைப்பொருள், புகைத்தல், மதுசாரம் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விளம்பரங்கள் பற்றி மாணவர்கள் கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கல்.

- ❖ மதுசாரம், சிகரட் உட்பட்ட போதைப்பொருட்களை விளம்பரப்படுத்துவதற்கு எடுக்கும் முயற்சிகள் தொடர்பான ஆக்கங்களைத் தயாரித்து அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கலும், அவற்றில் சிறந்த ஆக்கத்தைத் தெரிவு செய்து பரிசளித்தலும்

- ❖ பாடசாலை விளையாட்டு நிகழ்ச்சிகள், பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் கல்விச் சுற்றுலா என்பவற்றின் போது போதைப்பொருள் தடுப்பு தொடர்பான துண்டுப் பிரசுரங்களை பகிர்ந்தளித்தல், சுவரொட்டிகளைக் காட்சிப்படுத்தல்.

- ❖ பாடசாலையில் பேணப்படும் அறிவித்தல் பலகையில், மதுசாரம், போதைப்பொருள், சிகரட் தொடர்பான விளம்பரங்களுக்கு கூடுதல் பங்காற்றும் நடிக நடிகைகள், பாடகர்கள், ஊடக நிறுவனங்கள் பற்றிய விசேட குறிப்புக்களைச் சேகரித்தல். மேலும் குறித்த மாதத்தில் அவ்விளம்பரங்களுக்கு பங்காற்றிய ஊடக நிறுவனங்கள், நடிக நடிகைகளை இனங்கண்டு, இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்வதால் நாட்டின் பிள்ளைகளுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து தெளிவூட்டி கடிதம் அனுப்புதல். (இப்பணியை அனைத்து மாணவர்களுக்கும் ஒப்படைத்தாலும் நாளாந்தம் இக்குறிப்புக்களைச் சேகரிப்பதை ஒவ்வொரு மாணவனுக்கும் ஒப்படைத்தல் மாத இறுதியில் அதிக தடவைகள் பேசப்பட்ட பாடகர்கள், நடிகர் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கு இவ்வாறான செயற்பாடுகளைத் தவிர்க்குமாறு போதைப்பொருள் தடுப்புச் சங்கத்தின் மூலம் எழுத்து மூல வேண்டுகோளுக்கமைய இச்செயற்பாடுகள் குறித்து இருமுறை சிந்திப்பதற்கு தூண்டப்படுவர்)

- ❖ பாடசாலை மாணவர்களிடையே மதுசாரம், சிகரட் உட்பட்ட போதைப்பொருட்களின் பாவனை தொடர்பாக சிற்சில உற்சாகமான வசனங்களைப் பேசி வீரத்தைக் காட்ட முயலும் மாணவர்கள் இருந்தால் அவர்களுக்கு சிற்சில பதிலளிப்புக்களின் மூலம் அம்முயற்சியை பலமிழக்கச் செய்யும் விதத்திலான செயற்பாடுகளை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தல். (உதாரணம்: ஒரு மாணவன் ''நான் நேற்று ஒரு விருந்துக்குச் சென்றேன்'' என விபரிக்கும் போது அச்செயலை கேலிக்குட்படுத்தும் வகையில் '' நாமும் விருந்துக்குப் போயிருக்கின்றோம்'' ஆனால் கண்டிருப்பது வியர்த்துக்கொட்டி, வாந்தியெடுத்து, சரியாக சுவைத்துச் சாப்பிட முடியாமல், அசௌகரியமாக இருக்கின்றவர்களையே'' என்று கூறி குறித்த கருத்தை நிராகரிப்பதற்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். அவ்வாறே அனைத்து செயற்பாடுகளையும் நிராகரிக்கச் செய்யும் வகையிலான வசனங்களை மிகவும் உன்னிப்பாக மாணவர்களுடன் இணைந்து உருவாக்குவது சிறந்த செயற்பாடாக அமையும்)

- வருடாந்த கல்விச் சுற்றுலாவின் போது போதைப்பொருள் விளம்பரத்திற்கு எடுக்கும் முயற்சிகள் தொடர்பில் முறைசாரா விதத்தில் கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளல்

- ஏதேனும் சந்தர்ப்பத்தில் தமது பாடசாலையின் மாணவர் ஒருவர் போதைப்பொருள் பாவனை செய்து பிடிபட்டால், அதனை தேவையற்றவாறு பிரபலப்படுத்தாமல் குறித்த மாணவன் அல்லது அவர் சார்ந்த குழுவில் பாவனையை பலவீனமாக்கும் வகையிலான நிகழ்ச்சிகளை அல்லது நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- மதுசாரம், சிகரட் உட்பட்ட போதைப்பொருட்களின் பாவனையை ஊக்குவிக்கும் விதத்திலான பிரச்சார நடவடிக்கைகளுக்காக அதிக பங்களிப்பை வழங்கும் ஊடக நிறுவனங்கள், நபர்கள் பற்றி ஆராய்ந்து அது தொடர்பான தகவல்களை பாடசாலை சஞ்சிகைகளில் அல்லது ஊடகங்கள் மூலம் வெளியிடுவதற்கு நடவடிக்கையெடுத்தல். மேலும் சிகரட், மதுசாரக் கம்பனிகள் உட்பட ஊடக நிறுவனங்கள், நடிக நடிகைகள், பாடகர்கள் எமது நாட்டு மக்களின் மரணத்திற்கு எந்தளவு பங்களிப்பை வழங்குகின்றனர் என்பதை குறைந்தபட்சம் பாடசாலையிலேனும் பிரபலப்படுத்தல்.

- போதைப்பொருள் தொடர்பான பிரச்சினைகளையும் முறைப்பாடுகளையும் செய்வதற்கு “எனக்குச் சொல்லுங்கள்” அல்லது வேறு கவர்ச்சிகரமான கருத்துப் பெட்டியை பேணுதல். மேலும், போதைப்பொருள் பிரச்சினைகள் தொடர்பான கல்வி அமைச்சின் துரித இலக்கம் 1988 இன் மூலமும், 011-2784872 தொலைபேசி மூலமும், போதைப்பொருள் தடுப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணி 011-4354354/011-4354614 இலக்கங்களை தொடர்புகொண்டு தெரிவிக்கவும்.

- பொருத்தமான விடயங்களை ஏற்றுக்கொள்ளவும் பொருத்தமற்றவற்றை நிராகரிக்கவும் தற்துணிவு (Assertiveness) மாணவர்களிடையே ஏற்படுத்த வேண்டிய குணமாகும். அதன் மூலம் மதுசாரம் மற்றும் சிகரட் உட்பட்ட போதைப்பொருட்களின் பாவனைக்கு முன்வைக்கும் யோசனையை வெற்றிகரமாக நிராகரிக்கவும் முடியும் என்பதை எடுத்துரைத்தல்

- போதைப்பொருள் தடுப்பு பாடசாலையின் முக்கிய குழுச் செயற்பாடாகவும், அதிமுக்கியத்துவம் வாய்ந்த விடயமாகவும், பாடசாலையின் கலாச்சாரமாக்குவதற்கு பாடசாலையின் பொறுப்புவாய்ந்த அனைத்துத் தரப்பினரும் செயற்பட வேண்டியதுடன், இதனை யாருடைய ஒத்துழைப்பும் கிடைக்காத மாணவர்கள் அல்லது ஆசிரியர்களின் தனிப்பட்ட செயற்பாடாக அமைவதற்கு இடமளித்தல் கூடாது.

## 6.0 வெற்றிகரமான போதைப்பொருள் தடுப்புச் செயற்றிட்டத்தை அமுல்படுத்தும் பாடசாலையில் காணப்பட வேண்டிய பண்புகள்

1) போதைப்பொருள், மதுசாரம் மற்றும் சிகரட் பாவனையை ஊக்கப்படுத்தாமல் உதாசீனப்படுத்தும் பாடசாலைச் சூழல் உருவாகுதல்.

2) வெகுசன ஊடகங்களால் மேற்கொள்ளப்படும் விளம்பர உத்திகள் தொடர்பாக பாடசாலையில், வகுப்பறையில், மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்துரையாடப்படல்.

3) போதைப்பொருள் பாவனை தொடர்பாக வர்ணிப்பதற்கோ அல்லது பாராட்டுவதற்கோ சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது. அவ்வாறான சந்தர்ப்பங்களை கேலிக்குட்படுத்துவதைக் காணலாம்.

4) பாடசாலையிலும் வெளியிலும் போதைப்பொருள், சிகரட் மற்றும் மதுசார வகைகளின் பாவனையைத் தூண்டுவதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் தொடர்பில் கண்காணித்து அது தொடர்பில் அதிபரிடம் முறைப்பாடு செய்தல். அதற்குப் பொருத்தமான செயற்றிட்டமொன்றினை நடைமுறைப்படுத்தல்.

### ஆசிரியர்கள் குழாமில் ஏற்பட வேண்டிய மாற்றங்கள்

1) அனைத்துப் போதைப்பொருள் தடுப்புச் செயற்பாடுகள் விஞ்ஞானபூர்வமாக இருந்தாலும், பொறிமுறைகள், தலையிடும் காலம் மற்றும் சந்தர்ப்பத்திற்கேற்ப மாற்றமடைய வேண்டுமென அறிந்து கொள்ளல்.

2) ஆசிரியர் குழாமில் மதுசாரம், போதைப்பொருள் பாவனையை ஊக்குவிப்பவர்கள் இருப்பின், அவர்களை ஏனைய ஆசிரியர்கள் பலமிழக்கச் செய்தல்.

3) பாடசாலையில் மதுசாரம் மற்றும் சிகரட் உட்பட்ட போதைப்பொருள் பாவனையாளர்கள் இருப்பின், அவர்களைக் கவனத்தில் கொண்டு அவற்றை நிறுத்துவதற்கு நடவடிக்கையெடுத்தல்.

4) அனைத்து ஆசிரியர்களும் போதைப்பொருள் தடுப்புத் தொடர்பில் சரியான விஞ்ஞான ரீதியான அறிவைப்பெற்றிருத்தல்.

5) போதைப்பொருட்களின் பாவனையை ஊக்குவிக்கும் வகையிலான கருத்துக்கள், நடத்தைகள் மற்றும் வேறு அனைத்துவித ஊக்குவிப்புச் செயல்களையும் தவிர்த்தல்.

6) மதுசாரம், சிகரட் உட்பட்ட போதைப்பொருட்களின் பாவனை, அறிவாற்றல் குறைந்தவர்களின் செயலென்பதை ஆசிரியர் குழாம் விளங்கியிருத்தல்

7) மதுசாரம், போதைப்பொருள் மற்றும் புகைபொருள் பாவனை தொடர்பான விளம்பர உத்திகள், பாவனையின் உண்மையான விளைவுகள் மற்றும் பாதிப்புக்கள்

தொடர்பாகவும், போதைப்பொருள் பாவனையை ஊக்குவிக்கும் போலிப்பிரச்சாரங்கள் பற்றியும் மாணவர்களுடன் பகிரங்கமாகக் கலந்துரையாடல்.

8) போதைப்பொருள், மதுசாரம் மற்றும் சிகரட் கம்பனிகளால் மேற்கொள்ளப்படும் விளம்பரங்களைத் தடுத்தல், ஆசிரியர்களின் பொறுப்பு என்பதை விளங்கியிருத்தல்

9) மதுசாரம், சிகரட் உட்பட்ட போதைப்பொருட்களின் பாவனைத் தடுப்புப் பற்றி நடவடிக்கைகளை மேற்கொள்வதன் அவசியத்தை விளங்கிக்கொண்டு செயற்படல்

## மாணவர்களிடையே ஏற்பட வேண்டிய மாற்றங்கள்

(1) மதுசாரம், சிகரட் உட்பட்ட போதைப்பொருட்களின் பாவனைக்கு சிக்கிக்கொள்வது, அறிவாற்றல் குறைந்தவர்கள் என அனைத்து மாணவர்களும் தெளிவாயிருத்தல்

(2) மதுசாரம், சிகரட் உட்பட்ட போதைப்பொருட்கள் அல்லது வேறு ஏதேனும் பொருட்களை மாணவர்களிடையே பரப்புவதற்கு முயற்சிக்கும் நபர்கள் தொடர்பாகக் கவனமெடுத்து அதிபருக்குத் தெரியப்படுத்தல்

(3) மதுசாரம், சிகரட் உட்பட்ட போதைப்பொருட்களின் பாவனையை கேலிக்குட்படுத்தும் விதத்திலான நாடகங்கள், வீதி நாடகங்கள் உரையாடல் போன்ற படைப்புக்களை தயாரித்தலும் காண்பித்தலும்

(4) மதுசாரம், சிகரட் உட்பட்ட போதைப்பொருட்களின் பாவனையை பலவீனப்படுத்தும் வகையிலான சுவரொட்டிகள், பிரசுரங்கள், அறிவித்தல்கள் போன்ற படைப்புக்களைக் காட்சிப்படுத்தல்.

## 7.0 போதைப்பொருள் தடுப்புப் பற்றி மேற்கொள்ளக் கூடாத விடயங்கள்

1. மதுசாரம், சிகரட் உட்பட்ட போதைப்பொருட்களின் பாவனையைத் தூண்டும் வகையிலான செயற்பாடுகளை மேற்கொள்ளாமல் இருத்தல். (ஊர்வலம் செல்லல், நடைபவனி செல்லல்) இவ்வாறான செயற்பாடுகளை இயன்றவரை பயனுள்ள வகையில் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் போதைப்பொருட்களின் பாவனை பற்றிய உண்மைத் தாக்கங்களை எடுத்துக் கூறும் விதத்திலான ஊர்வலங்கள் அல்லது நடைபவனிகள் மூலம் அறிவைப் பெற்றுக்கொடுக்கவும் கவனத்தை ஈர்க்கவும் இயலும்.

2. மாணவர்களுக்கு உற்சாகம் ஏற்படுத்தும் வகையில் மதுசாரம், சிகரட் உட்பட்ட போதைப்பொருட்கள் பற்றி விபரித்தலும், மாணவர்கள் இதுவரை அறியாத போதைப்பொருட்களைப் பற்றி அறிமுகஞ் செய்தலும் வகைப்படுத்தலும் மேற்கொள்ளல் ஆகாது

3. மதுசாரம், சிகரட் உட்பட்ட போதைப்பொருட்களை பரீட்சித்துப் பார்க்கும் வகையில் தூண்டும் விதத்திலோ அல்லது விருப்பை உண்டாக்கும் வகையில் இரசனையாக விபரிப்பதோ ஆகாது.

4. சம்பிரதாய முறையிலான விரிவுரைகளை நடாத்துவது கூடாது.

5. மதுசாரம், சிகரட் உட்பட்ட போதைப்பொருட்களின் பாவனை ஒழுக்கத்திற்கு முரணான செயலென மாத்திரம் கருதி, அவற்றுக்குப் பிரதிபலிப்புக்களைக் காட்டுதல் ஆகாது. அதன் மூலம் மாணவர்களிடையே சமவயதுக்காரர்கள் தம்மை வீரர்களாகக் காட்டுவதைத் தவிர்க்க முடியும்.

## 8.0 போதைப்பொருள் தடுப்புப் பற்றிய பாடசாலை நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கையை அளவிடுவது போலவே அவற்றின் மூலம் அடைந்த பெறுபேறுகளை மதிப்பிடலும் மிகவும் முக்கியமானதாகும். நடாத்தப்பட்ட இந்நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எந்வொரு விதத்திலும் சிறு முன்னேற்றத்தை அடைந்தாலும் அது முக்கியமானதாகும். பெறுபேறுகளை கவனத்தில் கொண்டு நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தினால், குறைந்தளவு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தினாலும் அதிக பெறுபேறுகளை அடைவதன் மூலம் அவற்றின் வினைத்திறனை அதிகரிக்கலாம்.

- ❖ மாதாந்தம் போதைப்பொருள் தடுப்புக் குழு கூடி முன்னேற்றங்களைக் கலந்துரையாடல்

  வருடாந்தத் திட்டத்திற்கமைவாக தொடர்ச்சியான போதைப்பொருள் தடுப்பு செயற்பாடுகளின் முன்னேற்றங்களைத் தேடி ஆராய்ந்து அறிக்கைகளைப் பேணுவதும், இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை வலயக்கல்விக் காரியாலயத்திற்கு முன்னேற்ற அறிக்கையை வழங்கல் அதிபரின் முக்கிய பொறுப்பாகும்.

- ❖ வருடாந்தம் போதைப்பொருள் தடுப்புக் குழுவைப் புதுப்பித்தல் அவசியம்

### ➢ கீழ்க்காணும் எடுகோள்களுக்கமைய நடைமுறைப்படுத்தல் வேண்டும்

- ❖ மாதத்தில் நடாத்திய பயிற்சி செயலமர்வுகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தடுப்புச் செயற்பாடுகளின் எண்ணிக்கை
- ❖ பெற்றோர்களை தெளிவூட்டிய தடவைகள், பங்குபற்றுதல் மற்றும் பெற்றோரின் கருத்துக்கள்
- ❖ பாடசாலையில் போதைப்பொருள் தடுப்புச் செயற்பாடுகளில் ஆர்வத்துடன் பங்குகொள்ளும் மாணவர்களதும் ஆசிரியர்களதும் எண்ணிக்கை
- ❖ பாடசாலை மட்டத்தில் தயாரிக்கப்பட்ட சுவரொட்டிகள், பிரசுரங்கள், மற்றும் அறிவித்தல்களின் எண்ணிக்கையும், நடாத்திய நிகழ்ச்சிகளின் எண்ணிக்கையும் தயாரிக்கப்பட்ட விடயங்களின் எண்ணிக்கையும்.
- ❖ போதைப்பொருள் தடுப்புத் தொடர்பில் காலைக்கூட்டத்தில் உரையாற்றிய மாணவர்களின் எண்ணிக்கையும் உரைகளின் எண்ணிக்கையும்
- ❖ பாடசாலை ஊடகப்பிரிவு போதைப்பொருள் தடுப்பு தொடர்பாக வெளியிட்ட பிரசுரங்கள், வெளியீடுகள் மற்றும் பிரச்சாரங்களின் எண்ணிக்கையும் வாசகங்களின் எண்ணிக்கையும்

மதுசாரம், சிகரட் உட்பட்ட போதைப்பொருட்களின் விளம்பரங்களை நிறுத்துவதற்கு மேற்கொண்ட தலையீடுகள் பற்றிய விபரங்களைக் கீழ்க்காணும் அட்டவணையை பூர்த்தி செய்து, பாடசாலை மட்ட போதைப்பொருள் தடுப்புச் செயன்முறையின் தகவல்களைப் பேண வேண்டியதுடன், இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை போதைப்பொருள் தடுப்பு வலயமட்ட ஒருங்கிணைப்பாளருக்கு முன்னேற்ற அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.

மாகாணம் ....................................... வலயம் ..............................

பாடசாலை பெயர் .........................................இலக்கம் ..................

| இல | செயற்பாடு | பங்குபற்றுனர்களின் எண்ணிக்கை | | | | நடாத்திய நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | வேறு விடயங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | மாணவர்கள் | ஆசிரியர்கள் | பெற்றோர்கள் | வேறு | | |
| | | | | | | | |

பௌதீக ரீதியான முன்னேற்றங்களை அளவிட்டுப் பார்க்கும் போது, அதற்கு மேலதிகமாக போதைப்பொருள் தடுப்புச் செயற்றிட்டத்தின் பண்பு ரீதியான முன்னேற்றங்களை இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை மதிப்பிடுவதற்காக, கீழ்வரும் படிவத்தைப் பயன்படுத்தி தகவல்களை திரட்டி அறிக்கை பேணப்படல் வேண்டும். எழுமாறாக தெரிவு செய்யப்படும் மாணவர்களிடையே இத்தகவல்களைப் பெற்றுகொண்டு அறிக்கைப்படுத்த வேண்டும்.

## பண்பு ரீதியான மாற்றங்களை அளவிடல்

- மதுசாரம், சிகரட் உட்பட்ட போதைப்பொருட்களின் பாவனையை ஊக்குவிக்குவிப்பதற்காக மேற்கொள்ளப்படும் உத்திகள் பற்றி அறிந்துள்ளவர்களின் எண்ணிக்கை - வகுப்பறை மட்டத்திலும் பிரிவு மட்டத்திலும்
- மதுசாரம், சிகரட் உட்பட்ட போதைப்பொருட்களின் பாவனையால் ஏற்படும் பாதிப்புக்களை அறிந்துகொண்டவர்களின் எண்ணிக்கை
- மதுசாரம், சிகரட் உட்பட்ட போதைப்பொருட்களின் பாவனையுடன் பிணைந்துள்ள பல்வேறு மூடநம்பிக்கைகள் பற்றி அறிந்துள்ளவர்களின் எண்ணிக்கை
- மதுசாரம், சிகரட் உட்பட்ட போதைப்பொருட்களின் பாவனையைப் பலவீனப்படுத்தும் செயற்பாடுகள் தொடர்பாக அறிந்துகொண்டவர்களின் எண்ணிக்கை
- ஆக்கபூர்வமான தடுப்புச் செயற்பாடுகளுக்காக மாணவர்கள் மத்தியில் இருக்கும் ஆர்வமும் ஈடுபாடும்

இந்த மதிப்பீட்டிற்காக வினாத்தொடுப்பதன் மூலமும் கலந்துரையாடல் மூலமும், கண்காணிப்பதன் மூலமும் தகவல்களைப் பெறலாம். மதிப்பீட்டின் போது கீழ்க்காணும் ஒவ்வொரு அளவுகோல்களுக்கமைய புள்ளிகள் வழங்கும் போது குறைந்தது ஒவ்வொரு வயதுக்குழுவிலும் எழுமாறாக தெரிவு செய்யப்படும் இரு மாணவர்களுடனும், பெற்றோர் ஆசிரியர்களுடனும் கலந்துரையாடி புள்ளிகள் வழங்க வேண்டும்.

## போதைப்பொருள் தடுப்பு தொடர்பான பண்பு ரீதியான மதிப்பீட்டுப் படிவம்

மாகாணம்__________________________ வலயம் __________________________

பாடசாலையின் பெயர் ____________________________ இலக்கம் __________________________

புள்ளி வழங்கல் - ஒவ்வொரு அளவுகோல்களுக்கு அமைவான நிலைமைகளைக் கருத்திற்கொண்டு கீழக்காணும் வகையில் புள்ளி வழங்கவும்

06 புள்ளிகள் - சிறப்பு

05 புள்ளிகள் - மிக நன்று

04 புள்ளிகள் - நன்று

03 புள்ளிகள் - சாதாரணம்

02 புள்ளிகள் - முன்னேற்றம் தேவை

01 புள்ளி – மிகவும் துரிதமான முன்னேற்றம் தேவை

| இல | எடுகோள்கள் | அளவுகோல்கள் | புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | ஒழுங்கமைவான போதைப்பொருள் தடுப்புச் செயன்முறையொன்று பாடசாலையில் செயற்படுதல் | 1.1 பாடசாலை வருடாந்த திட்ட வரைபிலும் ஐந்தாண்டு திட்டத்திலும் போதைப்பொருள் தடுப்புச் செயற்பாடுகள் உள்வாங்கப்பட்டிருத்தல் | |
| | | 1.2 போதைப்பொருள் தடுப்புச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் | |
| | | 1.3 போதைப்பொருள் தடுப்புச் சங்கம் உருவாக்கப்பட்டு புது அங்கத்தவர்கள் இணைக்கப்பட்டு செயற்படுதல் | |
| | எடுகோளுக்கான மொத்த புள்ளிகள் | | |

| இல | எடுகோள்கள் | அளவுகோல்கள் | புள்ளிகள் |
|---|---|---|---|
| 02 | மதுசாரம், சிகரட் உட்பட்ட போதைப்பொருட்களின் பாவனையால் ஏற்படும் உண்மைத் தாக்கங்கள் பற்றி சரியாக அறிந்து அவற்றை எடுத்துக் கூறும் மாணவர்கள் ஆசிரியர்கள் இருத்தல் | 2.1 போதைப்பொருள் பாவனையால் உண்டாகும் சுகாதாரக் கேடுகள் பற்றி கூறப்பட்டுள்ளது. | |
| | | 2.2 போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் பிரதிகூலங்கள் பற்றி கூறப்பட்டுள்ளது | |
| | | 2.3 மதுசாரம் மற்றும் சிகரட் கம்பனிகள் சிறுவர்களை இலக்கு வைத்து இரகசியமான முறையில் வியாபார உத்திகளை மேற்கொள்வது பற்றி மாணவர்களை தெளிவுபடுத்தப்பட்டிருத்தல் | |
| | | 2.4போதைப்பொருள் பாவனையை ஊக்குவிப்பதற்காக ஊடகங்கள் மேற்கொள்ளும் தாக்கங்கள் பற்றி மாணவர்கள் அறிந்துள்ளனர் | |
| | | 2.5 போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் பிரதிகூலங்கள் பற்றி மாணவர்கள் அறிந்துள்ளனர் | |
| | | 2.6 மது போதைப்பொருள் பாவனை பற்றி சமூகத்திலுள்ள மூடநம்பிக்கைகள் தொடர்பாக மாணவர்கள் அறிந்துள்ளனர் | |
| | | | |
| | எடுகோளுக்கான முழுப் புள்ளிகள் | | |
| 3 | போதைப்பொருள் தடுப்பு தொடர்பில் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் பாடசாலையில் நடாத்தப்படல் | 3.1 போதைப்பொருள் தடுப்புச் செயற்பாடுகளுக்காக அனைத்து மாணவர்களும் பங்குகொண்டுள்ளனர் | |
| | | 3.2 போதைப்பொருள் தடுப்புப் பற்றி பல்வேறு ஆக்கபூர்வமான செயற்பாடுகள் பாடசாலையால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன | |
| | | 3.3போதைப்பொருள் செயற்பாடுகள் பாடசாலையின் அன்றாட நடவடிக்கைகளில் ஒன்றாகக் காணப்படல் | |
| | எடுகோளுக்கான முழுப் புள்ளிகள் | | |
| 4 | போதைப்பொருள் தடுப்பு தொடர்பாக நடைமுறைச் சாத்தியமான செயற்பாடுகள் பாடசாலையில் இடம்பெறல். | 4.1 கடந்த இரண்டு மாதங்களில் நடைபெற்ற போதைப்பொருள் தடுப்புச் செயற்பாடுகள் தொடர்பாக மாணவர்கள் | |

| | | | |
|---|---|---|---|
| | | கருத்துத் தெரிவித்தனர் | |
| | | 4.2 போதைப்பொருள் பாவனையைப் பலவீனப்படுத்தும் வகையிலான பிரதிபலிப்புகளை காட்டக்கூடிய மாணவர்கள் பாடசாலையில் உள்ளனர். | |
| | | 4.3 போதைப்பொருள் தடுப்புச் செயற்பாடுகளுக்காகப் பாடசாலை சமூகத்தினரையும் உள்வாங்கியுள்ளனர் | |
| | | 4.4 அன்றாட வாழ்விலும் வீட்டுச் சூழலிலும் போதைப்பொருள் தடுப்பு செயற்பாடுகளில் மாணவர்கள் தாம் ஈடுபடுவதை உறுதி செய்வர். | |
| | எடுக்கோளுக்கான முழுப் புள்ளிகள் | | |
| 5 | போதைப்பொருள் தடுப்புக்கு ஏற்புடைய வகையில் பாடசாலைச் சூழல் மற்றும் வளங்களைப் பயன்படுத்தியிருத்தல் | 5.1 போதைப்பொருள் தடுப்பு தொடர்பிலான பிரசுரங்கள், சுவரொட்டிகள், வாசகங்கள், கையேடுகள் பாடசாலையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன | |
| | | 5.2 போதைப்பொருள் தடுப்புத் தொடர்பிலான தகவல்களைச் சுவர்களில் காட்சிப்படுத்துதல் | |
| | | 5.3 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் போதைப்பொருள் தடுப்பு தொடர்பான அறிவை மேம்படுத்தும் நோக்கில் பாடசாலை நூலகத்தில் இதற்கெனப் பிரத்தியேகமாக இடம் ஒதுக்கி, பொருத்தமான நூல்கள், செய்தித்தாள்கள், கையேடுகள் மற்றும் காணொளிகள் போன்றவற்றைச் சேகரித்து வைத்தல். | |
| | | 5.4 போதைப்பொருள் தடுப்பு தொடர்பான நூல்களை ஆராய்ந்து கற்கும் பழக்கத்தை அதிகரிக்கச் செய்வதற்கான நிகழ்ச்சி பாடசாலை நூலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | |
| | எடுகோளுக்கான முழுப் புள்ளிகள் | | |
| 6 | போதைப்பொருள் தடுப்பு பாடசாலை நிகழ்ச்சித்திட்டத்தை மதிப்பிடல் | 6.1 போதைப்பொருள் தடுப்புச் செயற்பாடுகளை கண்காணிப்பதற்கான முறையான திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல் | |
| | | 6.2 போதைப்பொருள் தடுப்புக் | |

| | | | |
|---|---|---|---|
| | | குழு கடந்த இரண்டு மாதங்களாக நடாத்திய கூட்ட அறிக்கைகளை வைத்துள்ளனர் | |
| | | 6.3 வருடாந்த போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக அதிக பங்களிப்பை வழங்கிய மாணர் மற்றும் ஆசிரியர்களைப் பாராட்டும் நிகழ்வுகள் இடம்பெறல் | |
| | எடுகோளுக்கான முழுப் புள்ளிகள் | | |
| | மொத்தப் புள்ளிகள் | | |

**<u>போதைப்பொருள் தடுப்பு தொடர்பில் பாடசாலையின் நிலைமையை மதிப்பிடல்</u>**

எடுகோளுக்கு வழங்கப்பட்ட புள்ளிகளுக்கு அமைவாகக் கிடைக்கப்பெறும் புள்ளிகளை உச்ச புள்ளிகளால் வகுத்து நூறால் (100) பெருக்குவதன் மூலம் புள்ளிகளின் வீதத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

போதைப்பொருள் தடுப்பு தொடர்பான அளவுகோல் =

$$\frac{\text{பாடசாலை பெற்ற புள்ளிகள் } \times 100}{138 \text{ (23 அளவுகோளிலிருந்து பெறக்கூடிய அதியுச்ச புள்ளிகள்)}}$$

போதைப்பொருள் தடுப்பு தொடர்பான அளவுகோல் = ………..%

80 புள்ளிகளுக்கு மேல் - அதிசிறப்பு

70 - 80 புள்ளிகள் - மிக நன்று

60 - 69 புள்ளிகள் - நன்று

50 - 59 புள்ளிகள் - சாதாரணம்

40 - 49 புள்ளிகள் - முன்னேற்றம் தேவை

40 புள்ளிகளுக்கு குறைவு – மிகவும் துரிதமான முன்னேற்றம் தேவை

மேற்கண்டவாறு பாடசாலையின் நிலைமையை அறிந்துகொள்ளலாம்.

**போதைப்பொருள் தடுப்பு தொடர்பில் விஞ்ஞான ரீதியான அறிவைப் பெற்றுக்கொள்வதற்காகப் ஆராயக்கூடிய நூல்கள்**

போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அது தொடர்பான விஞ்ஞான ரீதியான அறிவு அத்தியாவசியமாவதுடன், சரியான விஞ்ஞான ரீதியான அறிவின்றி செயற்பாடுகளை ஈடுபடுவதால் முன்னிருந்த நிலைமையை விட அதிக பாதகமான நிலைமைகள் தோன்றலாம். அதனால் அறிவைப் பெறுவதற்கு கீழ்குறிப்பிடப்பட்டுள்ள நூல்களையும், இணையத்தளங்களையும் ஆராய்தல் சாலப்பொருந்தும்.


- சமரசிங்ஹ D (2016) பாடசாலை, ராஜகிரிய, இலங்கைத் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை
- சமரசிங்ஹ D (2008). மதுசாரம் பற்றி யாது செய்யலாம்? இலங்கை FORUT
- நாணயக்கார S (2004). ஹெரோயின் பாவனையிலிருந்து விடுதலை பெறுவோம். இலங்கை ADIC
- சமரசிங்ஹ டி (1990). போதைப்பொருள் தடுப்பு மற்றும் தவிர்ப்பு. இலங்கை ADIC
- Samarasinghe D (2005), Strategies to Address Alcohol Problems, Sri Lanka , FORUT
- Prevention and Cessation of Tobacco use. (2003), New Delhi: WHO
- Fekjaer,H.O. (1993), myths and realities, Sri Lanka: IOGT ADIC


**இணையதளங்கள் (காணொளி மற்றும் வேறு தகவல்கள் தொடர்பாக)**

http://moe.gov.lk

http://www.drugfree.gov.lk

http://www.nata.gov.lk

http://www.nddcb.gov.lk

http://www.adicsrilanka.org

http://www.healthylanka.lk

http://fisd.lk

http://www.facebook.com/DrugFreeLanka

http://www.facebook.com/adicsrilanka


தொடர்புகளுக்கு :

போதைப்பொருள் ஜனாதிபதி செயலணி

ஜனாதிபதி செயலகம்
கொழும்பு 01
தொலைபேசி இல : 011 4354614 / 011 4354561
மின்னஞ்சல் : psdp@presidentsoffice.lk